**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**

**<u>STC.NO- 259/2024</u>**

**Dated :04.03.2026**

**Deposition of witness for : P.W.1**

**List of Witness LW1 Examined as PW1 (Defacto Complainant )**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மாரிமுத்து | வயது | : | 39 |
| தந்தை பெயர் | : | மாமுண்டி | தாலுகா | : | புதுக்கோட்டை |
| கிராமம் | : | குப்பையன்பட்டி | தொழில் | : | விவசாயம் |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.

**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**
**Aadhar Card of the Witness verified.**

(1 முதல் 3 எதிரிகள் ஆஜர். 4 ஆம் எதிரி ஆஜரில்லை. அவரது சார்பில் பிரிவு சார்பில் பிரிவு 355 BNSS- ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது)

**<u>சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு</u>**

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். 4ஆம் எதிரி கோவிந்தராஜை எனக்கு தெரியும். கடந்த 20.09.2023 ஆம் தேதி, நானும் எனது தந்தை மாமுண்டி என்பவரும் எங்கள் வயலுக்கு சென்று கொண்டிருந்தோம். அப்போது மதியம் சுமார் 01.00 இருக்கும். நாங்கள் இருவரும் 1ஆம் எதிரி போதுமணி வீட்டிற்கு எதிரே சென்று கொண்டிருந்த போது, எங்களைப் பார்த்து தேவுடியா பயலே, நில்லுடா என்று அசிங்கமாக திட்டினார். பேசிக்கொண்டிருந்த போது எதிரிகள் கணேசன், கோவிந்தராஜ் ஆகியோர் எதிரி விருதாம்பாளை குச்சியால் அடிக்குமாறும் எது நடந்தாலும் பார்த்துக்கொள்ளலாம் என்றும் சொன்னார்கள். எதிரி விருதாம்பாள் ஆர்எஸ்பதி கட்டையால் எனது தலையில் அடித்ததில் எனக்கு இரத்த காயம் ஏற்பட்டது. எதிரி போதுமணி ஆர்எஸ்பதி கட்டையால் எனது இடுப்பில் அடித்தார். அருகில் இருந்த நபர்கள் விலக்கிவிட்டார்கள்.

2) எனது பெரியப்பா மகன் மதுரைவீரன் என்பவர் காயம்பட்ட என்னை இருசக்கர வாகனத்தின் மூலமாக புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்துச்

சென்று சிகிச்சைக்கு சேர்த்தார். மறுநாள் ஆதனக்கோட்டை காவல் நிலைய போலிசார் மருத்துவமனை வந்து விசாரித்து, புகார் வாக்குமூலம் பெற்றார்கள். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். இந்த புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். **(மேற்படி புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலிசார் என்னை விசாரித்தார்கள். நடந்த விபரங்களை கூறினேன்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1) ஆதனக்கோட்டையில் இருந்து ஆலங்குடி செல்லும் சாலையில் வடக்குபுறம் எங்கள் ஊர் உள்ளது என்றால் சாலைக்கு இடது புறம் உள்ளது. அந்த சாலை கிழமேல் சாலை என்றால் சரிதான். அந்த சாலைக்கு தென்புறம் சுமார் 1/2 கி.மீ. தொலைவில் எங்கள் வீடு உள்ளது என்றால் சரிதான். ஆதனக்கோட்டையில் இருந்து ஆலங்குடி செல்லும் சாலைக்கு வடக்கில், எதிரிகள் வீடு உள்ளது என்றால் சரிதான். வடக்கு புறமாக எங்கள் ஊருக்கு செல்லும் ரோட்டின் இருபுறமும் குடியிருப்புகள் உள்ளது என்றால் சரிதான். எங்கள் வயல் எங்கள் வீட்டில் இருந்து கிழக்கு புறம் உள்ளது என்றால் சரியல்ல. எங்கள் வயல் எங்கள் வீட்டிலிருந்து கிழக்கு புறம் தான் உள்ளது என்றாலும் எங்கள் வயலுக்கு செல்வதற்கு எதிரிகளின் வீட்டு வழியாக செல்லும் பாதையை நாங்கள் பயன்படுத்துவது இல்லை என்றாலும் சரியல்ல.

2) எனது தந்தைக்கு எதிரி கணேசன் சித்தப்பா என்றால் சரிதான். இருவருக்கும் இடையில் இடம் சம்மந்தமாக பிரச்சனை உள்ளது என்றால் ஆரம்பத்தில் இருந்தே பிரச்சினை இருந்து வருகிறது. நான் போலிப்பட்டா ஏற்படுத்திவிட்டதாக எதிரி கணேசன் என் மீது வருவாய் கோட்டாட்சியரிடம் மனு கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரி கணேசன் அவ்வாறு மனு கொடுத்தார் என்றாலும் அதனால் நாங்கள் ஆத்திரம் அடைந்து, 3,4 எதிரிகள் வீட்டில் இல்லாத போது எதிரிகளின் வீட்டிற்கு சென்று1,2 எதிரிகளை தாக்கி, காயப்படுத்தினோம் என்றால் சரியல்ல. இந்நீதிமன்றத்தில் CC 58/2024 என்று என் மீது வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். நானும் எனது தந்தையும் 1,2 எதிரிகளை அசிங்கமாக பேசி, வீடு புகுந்து அவர்களை தாக்கி, காயப்படுத்தியதாக 1ஆம் எதிரி அளித்த புகாரின் பேரில் தான் மேற்படி வழக்கு பதிவு செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். அந்த வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக நானும் எனது தந்தையும் முந்திக்கொண்டு எதிரிகள் மீது பொய்யாக புகார் அளித்துள்ளோம் என்றால் சரியல்ல, எதிரிகள் தான் என்னை அடித்தார்கள்.

3) நான் முதல் விசாரணையில் கூறியுள்ள சம்பவம் எதிரிகளின் வீட்டிற்கு அருகில் வசிக்கும் நபர்களுக்கு தெரியும் என்றால் சரிதான். 2ஆம் எதிரி விருதாம்பாள் ஊராட்சி மன்ற தலைவராக

இருந்தார் என்றால் சரிதான். 2ஆம் எதிரியின் கணவர் 4 ஆம் எதிரி ஊர் பொதுமக்கள் மத்தியில் நல்ல பெயருடன் இருந்து வருவதால் அவரை அசிங்கப்படுத்த வேண்டும் என்பதற்காக அவரையும் பொய்யாக இவ்வழக்கில் சேர்த்துள்ளோம் என்றால் சரியல்ல. அருகில் உள்ள ஆதனக்கோட்டை மருத்துவமனைக்கு ஏன் செல்லவில்லை என்றால் சண்டையில் எனது மண்டை உடைந்து இரத்தக்காயம் ஏற்பட்டதால், நேரடியாக புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்றேன். நான் ஆதனக்கோட்டை மருத்துவமனைக்கு சென்றேன் என்றாலும் எனக்கு காயம் எதுவும் இல்லாததால் திருப்பி அனுப்பிவிட்டார்கள் என்றாலும் சரியல்ல. நான் அதன்பிறகு பெருங்களூர் மருத்துவமனைக்கு சென்றேன் என்றாலும் எனக்கு காயம் எதுவும் இல்லாததால் திருப்பி அனுப்பிவிட்டார்கள் என்றாலும் சரியல்ல. அதன்பிறகு நானே காயத்தை ஏற்படுத்திக் கொண்டு புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்று சிகிச்சைக்கு சேர்ந்தேன் என்றால் சரியல்ல, விருதாம்பாள் தான் எனக்கு காயத்தை ஏற்படுத்தினார்.

4) நான் புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்த போது, மருத்துவரிடம் நான் தான் விபரம் கூறினேன் என்றால் சரிதான். எனக்கும் எனது தந்தைக்கும் தவிர வேறு யாருக்கும் வழக்கு சம்பவம் பற்றி தெரியும் என்று புகார் வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன். நான் அவ்வாறு சொல்லவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்லவில்லை என்றாலும் சரியல்ல. நான் சொன்ன விசயங்களை தான் போலிசார் வாக்குமூலமாக எழுதிக்கொண்டார்கள் என்றால் சரிதான். அதனைப்படித்துப் பார்த்து தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லியவாறு சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் நாங்கள் தான் எதிரிகளை தாக்கி கண்ணியக்குறைவாக நடந்து கொண்டோம் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை**

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.04 15:35:18 +0530

**என்.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**

**<u>STC.NO- 259/2024</u>**

**Dated :04.03.2026**

**Deposition of witness for : P.W.2**

**List of Witness LW2 Examined as PW2 (Eye Witness)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மாமுண்டி | வயது | : | 69 |
| தந்தை பெயர் | : | ரெங்கசாமி | தாலுகா | : | புதுக்கோட்டை |
| கிராமம் | : | குப்பையன்பட்டி | தொழில் | : | விவசாயம் |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.

**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**
**Aadhar Card of the Witness verified.**

(1 முதல் 3 எதிரிகள் ஆஜர். 4 ஆம் எதிரி ஆஜரில்லை. அவரது சார்பில் பிரிவு சார்பில் பிரிவு 355 BNSS- ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது)

**<u>சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு</u>**

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் மற்றும் 4ஆம் எதிரி கோவிந்தராஜை எனக்கு தெரியும். அ.சா.1 மாரிமுத்து எனது மகன் ஆவார். கடந்த 20.09.2023 ஆம் தேதி, நானும் எனது மகன் அ.சா.1 மாரிமுத்து என்பவரும், எங்கள் வீட்டிலிருந்து மேற்கு புறமாக சென்று கிழக்கில் உள்ள எங்கள் வயலுக்கு சென்று கொண்டிருந்தோம். அப்போது மதியம் சுமார் 01.00 இருக்கும். எனது மகன் இருசக்கர வாகனத்தினை ஓட்டிச் சென்றார், நான் பின்னால் அமர்ந்திருந்தேன். நாங்கள் இருவரும் 1ஆம் எதிரி போதுமணி வீட்டிற்கு எதிரே சென்று கொண்டிருந்த போது, 1ஆம் எதிரி நாங்கள் சென்ற இருசக்கர வாகனத்தை தேக்கி, தள்ளிவிட்டார். நாங்கள் இருவரும் கீழே விழுந்துவிட்டோம். அப்போது எதிரிகள் கணேசன், கோவிந்தராஜ் ஆகியோர் எதிரி விருதாம்பாளை குச்சியால் அடிக்குமாறு சொன்னார்கள். எதிரி விருதாம்பாள் ஆர்எஸ்பதி கட்டையால் அ.சா.1-ன் நடு மண்டையில் அடித்ததில் இரத்த காயம் ஏற்பட்டு கீழே விழுந்து விட்டார். எதிரி போதுமணி ஆர்எஸ்பதி கட்டையால் அ.சா.1-இன் இடுப்பில் அடித்தார். நான் அதன் பிறகு எழுந்து

விலக்கிவிட்டேன். எனது அண்ணன் மகன் மதுரைவீரன் என்பவர் காயம்பட்ட எனது மகனை இருசக்கர வாகனத்தின் மூலமாக புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சைக்கு சேர்த்தார். ஆதனக்கோட்டை காவல் நிலைய போலிசார் மருத்துவமனை வந்து விசாரித்தார்கள். சம்பவ இடத்தை வந்து பார்த்தார்கள். எழுதிக்கொண்டு கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள். நடந்த விபரங்களை கூறினேன்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1) போலிசார் நான் சொன்ன விபரங்களை எழுதிக்கொண்டு என்னிடம் கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள் என்றால் சரிதான். ஒரு வாரம் கழித்து தான் போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான். ஒருவாரம் கழித்து தான் போலிசார் சம்பவ இடத்தைப் பார்த்தார்கள் என்றால் சரியல்ல, அதற்கு முன்பாக வந்துவிட்டார்கள். நான் முதல்விசாரணையில் சொல்லியுள்ள விபரங்களை போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 இன் வாகனத்தை மறித்து, கீழே தள்ளிவிட்டது அ.சா.1-க்கு தெரியும் என்றால் சரிதான். எனது அண்ணனின் மருமகள் பிரியாவிற்கும் மேற்படி விபரம் தெரியும் என்றால் சரிதான்.

2) எங்கள் ஊர் அருகில் ஆதனக்கோட்டையிலிருந்து ஆலங்குடி செல்லும் சாலை கிழக்கு மேற்கு செல்லும் சாலை என்றால் சரிதான். மேற்படி சாலையிலிருந்து, எங்கள் ஊருக்கு செல்வதற்கு வடக்கிலும் தெற்கிலும் சாலை உள்ளது என்றால் சரிதான். எங்கள் வீட்டிற்கு தெற்கில் செல்லும் சாலையில் சென்று, கிழக்கில் திரும்ப வேண்டும் என்றால் சரிதான். எங்கள் வீட்டிற்கும் கிழக்கில் தான் வயல்கள் உள்ளது என்றால் சரியல்ல, கொல்லைக்காடு மற்றும் குளம் உள்ளது. எங்கள் வீட்டிற்கு கிழக்கில் கோவில் உள்ளது என்றால் கோவில் உள்ளது என்றால் சரியல்ல. எங்கள் வீட்டிற்கு வடக்கில் கோவில் உள்ளது என்றால் கோவில் உள்ளது என்றால் சரிதான். எங்கள் வீட்டிலிருந்து வடக்கு நோக்கி அந்த கோவிலுக்கு செல்லலாம் என்றால் சரிதான். கோவிலிலிருந்து ஆலங்குடி ரோட்டிற்கு செல்லலாம் என்றால் சரிதான். அதற்கும் கிழக்கில் தான் வயல் உள்ளது என்றால் கோவிலுக்கு கிழக்கில் வயல் உள்ளது.

3) நாங்கள் வயலுக்கு செல்ல வேண்டும் என்றால், அந்த வழியாக தான் செல்ல வேண்டும் என்றாலும் நாங்கள் எதிரிகளிடம் வம்பு செய்ய வேண்டும் என்பதற்காக எதிரிகள் வீட்டு வழியாக சென்றோம் என்றால் சரியல்ல. ஆதனக்கோட்டையிலிருந்து ஆலங்குடி செல்லும் சாலைக்கு வடக்கில் எதிரிகள் வீடு உள்ளது என்றால் சரியல்ல, கிழக்கில் உள்ளது. எதிரிகள் வீடு மேற்படி சாலைக்கு வடக்கில் தான் உள்ளது என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. 3ஆம் எதிரி எனது சித்தப்பா மகன் என்றால் சரிதான்.

எங்களுக்கும் எதிரிகளுக்கும் இடையே இடப்பிரச்சினை உள்ளது என்றால் இல்லை. போலிசார் விசாரணையில், எனக்கும் 3ஆம் எதிரிக்கும் இடையே இடப்பிரச்சினை இல்லை என்று தான்சொன்னேன் என்றால் சரிதான், முன்னோர்கள் பிரச்சினை.

4) அ.சா.1 போலிப்பட்டா ஏற்படுத்திவிட்டதாக எதிரி கணேசன் என் மீது வருவாய் கோட்டாட்சியரிடம் மனு கொடுத்தார் என்றாலும் அதனால் நாங்கள் ஆத்திரம் அடைந்து, 3,4 எதிரிகள் வீட்டில் இல்லாத போது எதிரிகளின் வீட்டிற்கு சென்று 1,2 எதிரிகளை தாக்கி, காயப்படுத்தினோம் என்றால் சரியல்ல. இந்நீதிமன்றத்தில் CC 58/2024 என்று என் மீதும் என் மகன் மீதும் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். நானும் எனது மகனும் 1,2 எதிரிகளை அசிங்கமாக பேசி, வீடு புகுந்து அவர்களை தாக்கி, காயப்படுத்தியதாக 1ஆம் எதிரி அளித்த புகாரின் பேரில் தான் மேற்படி வழக்கு பதிவு செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். அந்த வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக நானும் எனது மகனும் முந்திக்கொண்டு எதிரிகள் மீது பொய்யாக புகார் அளித்துள்ளோம் என்றால் சரியல்ல, எதிரிகள் தான் என் மகனை அடித்தார்கள்.

5) நான் முதல் விசாரணையில் கூறியுள்ள சம்பவம் எதிரிகளின் வீட்டிற்கு அருகில் வசிக்கும் நபர்களுக்கு தெரியும் என்றால் சரிதான். 2ஆம் எதிரி விருதாம்பாள் ஊராட்சி மன்ற தலைவராக இருந்தார் என்றால் சரிதான். 2ஆம் எதிரியின் கணவர் 4 ஆம் எதிரி ஊர் பொதுமக்கள் மத்தியில் நல்ல பெயருடன் இருந்து வருவதால் அவரை அசிங்கப்படுத்த வேண்டும் என்பதற்காக அவரையும் பொய்யாக இவ்வழக்கில் சேர்த்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியவாறு சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் நாங்கள் தான் எதிரிகளை தாக்கி கண்ணியக்குறைவாக நடந்து கொண்டோம் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை**

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**என்.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**

**STC.NO- 259/2024**

**Dated :04.03.2026**

**Deposition of witness for : P.W.3**

**List of Witness LW3 Examined as PW3 (Eye Witness)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பிரியா | வயது | : | 32 |
| கணவர் பெயர் | : | மதுரை வீரன் | தாலுகா | : | புதுக்கோட்டை |
| கிராமம் | : | குப்பையன்பட்டி | தொழில் | : | விவசாயம் |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.

**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**
**Aadhar Card of the Witness verified.**

(1 முதல் 3 எதிரிகள் ஆஜர். 4 ஆம் எதிரி ஆஜரில்லை. அவரது சார்பில் பிரிவு சார்பில் பிரிவு 355 BNSS- ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது)

**<u>சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு</u>**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் மற்றும் 4ஆம் எதிரி கோவிந்தராஜை எனக்கு தெரியும். அ.சா.1 மாரிமுத்து எனது சின்ன மாமனார் மகன் ஆவார். அ.சா.2 எனது மாமனார் ஆவார். கடந்த 20.09.2023 ஆம் தேதி, மதியம் சுமார் 01.00 மணியளில், அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் இருசக்கர வாகனத்தில் 1ஆம் எதிரி போதுமணி வீட்டு வழியாக சென்றார்கள். நான் 1ஆம்எதிரி வீட்டிற்கு எதிரே உள்ள எனது வீட்டில் நான் குழந்தையை வைத்து கொண்டு நின்று கொண்டிருந்தேன். அப்போது 1ஆம் எதிரி அ.சா.1 மற்றும் அ.சா.2 வந்த வண்டியை மறைத்து, தேவுடியா பயலே என்று சொன்னார். பேசிக்கொண்டிருந்த போது, எதிரிகள் கணேசன், கோவிந்தராஜ் ஆகியோர் எதிரி விருதாம்பாளை பார்த்து அடிக்குமாறு சொன்னார்கள். எதிரி விருதாம்பாள் ஆர்எஸ்பதி கட்டையால் அ.சா.1-ன் தலையில் அடித்ததில் அ.சா.1 மற்றும் அ.சா.2 வண்டியில் இருந்து கீழே விழுந்துவிட்டார்கள். அ.சா.1-க்கு தலையில் இரத்தம் வந்தது. எதிரி போதுமணி பக்கத்தில் இருந்த கட்டையை எடுத்து அ.சா.1-இன் இடுப்பில் அடித்தார். நான் உடனடியாக போன் மூலமாக

தகவல் சொன்னதன் பேரில் எனது கணவர் அங்கு வந்து காயம்பட்ட அ.சா.1-ஐ இருசக்கர வாகனத்தில், மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். போலிசார் என்னை விசாரித்தார்கள். நடந்த விபரங்களை கூறினேன்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1) போலிசார் என்னை விசாரித்த போது, நான் தகவல் சொல்லிதான் எனது கணவர் வந்தார் என்ற விபரத்தை சொன்னேனா என்றால் இல்லை, போலிசார் அதை என்னிடம் கேட்கவில்லை. அ.சா.1 மற்றும் அ.சா.2 இரு சக்கர வாகனத்தில் சென்றார்களா என்ற விபரத்தை போலிசார்என்னிடம் கேட்கவில்லை என்றாலும் நான் சொல்லவில்லை என்றாலும் சரிதான். போலிசார் விசாரணையில் இருசக்கர வாகனத்தை மறித்து, அ.சா.1இன் தலையில் அடித்ததாக சொன்னேனா என்றால் அதை எல்லாம் என்னிடம் போலிசார் கேட்கவில்லை. போலிசார் என்னிடம் வந்து எனது பெயரை கேட்டார்கள், சண்டை எங்கு நடந்தது என்று கேட்டார்கள், நான் இடத்தை காட்டினேன், சண்டையை நேரடியாக பார்த்தீர்களா என்று கேட்டார்கள் பார்த்தேன் என்று சொன்னேன். எனது குழந்தை அழுதுவிட்டதால் போலிசார் அங்கிருந்து சென்றுவிட்டார்கள். மேற்படி விபரத்தை தவிர வேறு எதையும் போலிசார் கேட்கவில்லை என்றால் சரிதான்.

2) ஆதனக்கோட்டையில் இருந்து ஆலங்குடி செல்லும் சாலையில் எனது வீடு வடக்கே செல்லும் சாலையில் உள்ளது என்றால் சரிதான். 1ஆம் எதிரியின் வீட்டைத்தாண்டி தான் எனது வீடு உள்ளது என்றால் 1,2 எதிரிகளின் வீடு எனது வீட்டிற்கு எதிரில் உள்ளது. ஆலங்குடி செல்லும் சாலையில் இருபுறமும் வீடுகள் உள்ளது என்றால் சரிதான். மெயின் ரோட்டில் இருந்து கிழக்கே தான் கோவில் உள்ளது என்றால் சரிதான். அந்த கோவிலிலிருந்து தெற்காக சென்றால் அ.சா.2 வீட்டிற்கு செல்லலாம் என்றால் சரியல்ல. அந்த வழியாக இரு சக்கர வாகனம் செல்ல முடியாது. எங்களை வீட்டை சுற்றிலும் நிறைய வீடுகள் உள்ளது என்றால் சரிதான். அந்த வீடுகளில் வசிப்பவர்களுக்கும் சம்பவம் பற்றி தெரியும் என்றால் அந்த நேரத்தில் வீட்டில் இருந்தவர்களுக்கு தெரியும். யார் யாருக்கு சம்பவம் பற்றி தெரியும் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான், நான் எனது வீட்டில் இருந்து தான் பார்த்தேன். நான் அந்த நேரத்தில் சம்பவ இடத்தில் இல்லை என்பதால் தான் யார் யாருக்கு சம்பவம் பற்றி தெரியும் என்று எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. போலிசார் என்னை விசாரித்த போது, வேறு யார் யாருக்கு சம்பவம் பற்றி தெரியும் என்று என்னிடம் கேட்கவில்லை என்றால் சரிதான்.

3) அ.சா.1 போலிப்பட்டா ஏற்படுத்திவிட்டதாக எதிரி கணேசன் அ.சா.1 மற்றும் அ.சா.2 இன் மீது வருவாய் கோட்டாட்சியரிடம் மனு கொடுத்தார் என்றாலும் அதனால் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆத்திரம் அடைந்து, 3,4 எதிரிகள் வீட்டில் இல்லாத போது எதிரிகளின் வீட்டிற்கு சென்று 1,2

எதிரிகளை தாக்கி, காயப்படுத்தினார்கள் என்றால் சரியல்ல. இந்நீதிமன்றத்தில் CC 58/2024 என்று அ.சா.1 மற்றும் அ.சா.2இன் மீது வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் முதல் விசாரணையில் சொல்லியவாறு சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் அ.சா.1 மற்றும் அ.சா.2 தான் எதிரிகளை தாக்கி கண்ணியக்குறைவாக நடந்து கொண்டார்கள் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை**

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**என்.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**